18.06.2026.
அ.வ.எண்.190/2018

பிவா. சா. 3 கோபாலகிருஷ்ணன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

1ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் செய்தார் என்ற விவரம் எனக்குத் தெரியும். தாவா சொத்து சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா பெயர் பெருமாள் நாயுடு ஆகும். என்னுடைய பாட்டி பெயர் பார்வதியம்மாள். தாவாச்சொத்துக்கள் என் பாட்டி பார்வதியம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பாட்டி, தாத்தா மற்றும் வாதி ஆகியோர்கள் தாவா வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். வாதி திருமணமானபின்னர் வெளியே சென்றுவிட்டார். கடைசி காலத்தில் திரும்பவும் வீட்டிற்கு வந்தார். திருமணமானபின்னர் என் பாட்டியின் வாரிசுகள் அவரவர்கள் தனித்தனியாக வெளியே சென்று விட்டார்கள். தாவா வீட்டில் என்னுடைய பாட்டி, தாத்தா மற்றும் வாதி எப்போதும் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி மற்றும் தாத்தா தாவா வீட்டில் காலமானார்கள் என்றால் சரிதான். அவர்கள் காலமாகும்வரை வாதிதான் அவர்களை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நானோ என்னுடைய குடும்பத்தாரோ என்னுடைய தாத்தாவை பராமரித்து வந்தோம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானோ என்னுடைய குடும்பத்தாரோ என்னுடைய பாட்டி தாத்தாவுடன் ஒரே வீட்டில் இருந்தோம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவாச்சொத்தைப்பொறுத்து வாதிக்கு ஆதரவாக பார்வதியம்மாள் எழுதிக் கொடுத்தாகச்சொல்லப்படும் உயில் சம்மந்தமாக நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பத்திரத்தை எங்கு வேண்டுமானாலும் வாங்கி உயில் எழுதலாம் என்றால் சரியல்ல. எனக்கு மதுரை மற்றும் வாடிப்பட்டியில் உறவினர்கள் இருக்கிறார்கள் என்றால் மதுரையில் இருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் வாங்கப்பட்ட பத்திர காகிதத்தில் என் பாட்டி உயில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயில் போலியானது என்று அதுகுறித்து புகார் எதுவும் கொடுக்கவில்லை. வாதிக்கும், பார்வதியம்மாளுக்கும் பிரச்சனை இருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பாட்டனார் பெருமாள் நாயக்கர் உயிரோடு இருக்கும்போது அவரது பிள்ளைகளுக்கு கடைகள் மற்றும் இடங்களை பிரித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மோகன் ஸ்டோர்ஸ் என்ற கடையை என் அப்பா நடத்தி வந்தார் என்றால் என் அப்பா பெயரில் தாத்தா ஆரம்பித்த கடையாகும். தற்போது என் அப்பாவின் வாரிசு என்ற முறையில் அந்த கடையை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். வாதி நகை திருடியதாக திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் என் பாட்டி புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை தாவாச்சொத்திலிருந்து அப்புறப்படுத்த என்னுடைய தகப்பனார் மற்றும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து பொய்யாக மேற்படி புகாரை கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் பேரில் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 08.01.2013ம் தேதி புகார் கொடுக்கப்பட்ட பின்னர் 31.12.2014 வரை பார்வதியம்மாளுடன் வாதி தாவா வீட்டில் குடியிருந்தார் என்றால்

சரிதான். வாதி பல நபர்களிடம் வாங்கிய கடனை பெருமாள் நாயக்கர்தான் செலுத்தினார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்குரிய மின்கட்டண ரசீது, குடிநீர் இணைப்பு ரசீது, வீட்டு வரி ரசீதுகள் வாதியின் பெயரில் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. உயிலில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் என்னுடைய குடும்பத்திற்கு வேண்டியவர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி 31.12.2014ம் தேதி இறந்த பின்னர் தாவா உயில் அமலுக்கு வந்தது என்றால் சரியல்ல. தகுந்த சாட்சிகளின் முன்னிலையில் வாதிக்கு ஆதரவாக தாவா உயிலை என்னுடைய பாட்டி எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அது செல்லத்தக்க உயில் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா உயிலின் அடிப்படையில் தாவாச்சொத்தை வாதி அடைந்து நாளதுதேதிவரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி மீது பொறாமை கொண்டு நான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பிராதில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.18 17:00:20 +0530

Principal District Judge,
Dindigul.